[2003 ஜனவரி 28

12—

பெண்கள் விடுதி

•16269—செல்வி க. பாலபாரதி:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கலில் அரசு சார்பாக முதியோர் அல்லது உழைக்கும் பெண்கள் விடுதி உருவாக்க அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் மாவட்டத்தில் மத்திய அரசு நிதியுதவியுடன் 4 முதியோர் இல்லங்களையும், இரண்டு உழைக்கும் பெண்கள் விடுதிகளையும் தொண்டு நிறுவனங்கள் நடத்தி வருவதால், இம்மாவட்டத்தில் அரசு சார்பாக முதியோர் அல்லது உழைக்கும் பெண்கள் விடுதி உருவாக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

செல்வி க. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக திண்டுக்கல்லில் மட்டுமல்லாது, நமது சமூகத்தில் பெண் சிசுக்களை, ஆண் சிசுக்களைக்கூட இன்றைக்கு பெற்றோர்கள் கைவிடக்கூடிய சூழ்நிலை உருவாகி வருகிறது. அந்தக் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆனதற்குப் பின்பு, தங்களது பெற்றோர்களைக் கைவிடக்கூடிய ஒரு சமூக நெருக்கடிக்கு ஆளாகி வருகிறார்கள். இது தமிழகத்தில் மட்டுமல்ல, உலக அளவிலே நிகழ்ந்து கொண்டு வருகிறது. ஆகவே முதியோர்களைப் பாதுகாப்பதற்கான கடமை குழந்தைகளுக்கு மட்டுமல்ல, அரசுக்கும் இருக்கிறது. ஆகவே அதை மாநில அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்பது என்னுடைய கருத்து. அந்தக் கருத்திலிருந்துதான் திண்டுக்கல்லில் மாநில அரசினுடைய நிதி உதவியோடு கூடுதலாக முதியோர் இல்லம் அமைக்கப்படுமா என்பதை கொள்கை அளவில் எதிர்காலத்தில் பரிசீலிப்பீர்களா என்ற கேள்வியினை உங்கள் முன்னால் வைக்கிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 8 மாவ்ட்டங்களில், 9 முதியோர் இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. எஞ்சிய மாவட்டங்களில்

2003 ஜனவரி 28]

ஒரு மாவட்டத்திற்கு ஒரு இல்லம் என்ற வகையில், ஒரு வருடத்திற்கு 4 இல்லங்கள் வீதமாக அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர், மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். முதியோர்களைக் கவனிப்பதற்காக இதுவரைக்கும், உணவீட்டுச் செலவினமாக 250 ரூபாய் மட்டும் வழங்கப்பட்டு வந்ததை மனித நேயம் மிக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் 500 ரூபாய் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு, அதுவும் வழங்கப்பட்டு வருகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, முதியோர்களைக் கண்ணியத்துடனும், மரியாதையோடும் நடத்தவேண்டும் என்கிற அளவில் மத்திய அரசின் அறிவுறுத்தலுக்கு இணங்க— மாநில அளவில் முதியோர்களுக்கான ஒரு கொள்கை வெளியிடப்பட வேண்டும் என்கின்ற அறிவிப்பைக் கேட்டு—இந்தியாவிலேயே நம்முடைய தமிழகத்திலேதான் முதன்முதலில் முதியோர்களுக்கான கொள்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடுவதற்குத் தயார் நிலையில் உள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

செல்வி க. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைக்கும் பெண்கள் தமிழகத்தில் இன்றைக்கு இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள். அரசுத் துறைகளில் மட்டுமல்லாது, தனியார் துறைகளிலும் பணிபுரிகிறார்கள். இவர்கள் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்குச் சென்று பணிபுரிகிறபோது, அவர்களுக்குத் தங்கும் இடம் என்பது ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. வாடகை வீடு எடுப்பதற்கு தனியாக ஒரு பெண் செல்கிறபோது, அவர்களுக்கு அந்த வாடகை வீடு கிடைப்பதில் சிரமம் இருக்கிறது. அதேபோல அலுவலகத்தில் இருக்கக்கூடிய ஒரு ஆண் அதிகாரியோ, ஒரு பெண் அதிகாரியோ அவர்களுக்கு வாடகை வீடு பிடித்துக் கொடுப்பதிலும், உதவி செய்வதிலும் சிரமம் இருக்கிறது. ஆகவேதான் உழைக்கக்கூடிய பெண்களுக்கு, மாவட்டங்களில் அரசு இல்லம் அல்லது அரசு விடுதி என்பது இன்றைக்குத் தேவைப்படுகிறது. சில தனியார் நிறுவனங்கள் மத்திய அரசின் உதவியோடு உழைக்கும் பெண்களுக்கான விடுதிகளை நடத்துகிறார்கள். ஆனால் 2 மாத ஊதியத்தைப் பெற்றால்தான் ஒரு மாத வாடகையைக் கொடுக்கமுடியும் என்ற அளவிற்கு கடுமையான வாடகை இருக்கிறது. நம்முடைய தமிழகத்தில்

மகளிருக்கான காவல் நிலையங்கள் அதிகரிக்கின்றன. அதேபோன்று பெண்களுக்கான சுகாதார வளாகங்கள் கட்டப்படுகின்றன. அதேபோன்று மாவட்டந்தோறும் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து உழைக்கும் பெண்களுக்கான விடுதி கட்டப்படவேண்டும் என்பதை கொள்கை அளவில் அரசு பரிசீலிக்குமா என்ற கேள்வியைக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையின்கீழ் மொத்தம் 8 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்படுத்தப்படுகின்றன. தனியார் தொண்டு நிறுவனங்களால் 89 பணிபுரியும் மகளிர் இல்லங்கள் நடத்துவதற்கு மத்திய அரசு, தமிழக அரசின் உதவியோடு மானிய உதவி வழங்கியுள்ளது. அதைத்தவிர தொண்டு நிறுவனங்கள் அரசினுடைய அனுமதியைப் பெறாமல்கூட பல்வேறு பகுதிகளில், நகர்ப்புறங்களில் இதுபோன்ற விடுதிகளை நடத்திக் கொண்டிருக்கின்றன. எனவே உழைக்கும் மகளிரை மனதிலேகொண்டு—மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய யோசனை, நல்ல யோசனை—எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் இதற்குச் சம்மதிப்பார்களேயானால், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இதை அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

13—

மாணவிகளுக்கு விடுதி

•20608—திரு. ப. பொன்னம்பலம்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஒன்றியம், சமயநல்லூர் தொகுதி, இளமனூரில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு தங்கும் விடுதி கட்டித் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS